## சுருக்கம்

பணியமைப்பு – அரசு மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்ட பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குவது – நிதி ஒதுக்கீடு செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (சி.1) துறை**

அரசாணை (நிலை) எண்.173

நாள்.19.06.2014
திருவள்ளுவர் ஆண்டு 2045
ஆனி:5

படிக்கப்பட்டது

1) அரசாணை (நிலை) எண் 325, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.20.11.2012.
2) மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.68995 /நிபி5 /1 / 2012, நாள் 23.08.2008 மற்றும் 12.11.2013.
3) அரசாணை (நிலை) எண்.109, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.02.05.2014.

====

ஆணை:-

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் அரசு மருத்துவமனைகளில் காலியாக உள்ள துப்புரவு பணியாளர் / மருத்துவமனைப் பணியாளர் மற்றும் செவிலிய உதவியாளர் நிலை–2 பணியிடங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு பல்நோக்கு மருத்துவ பணியாளர்கள் என பணி நியமனம் செய்ய ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வை 3–ல் காணும் அரசாணையில் அரசு மருத்துவமனைகளில் பணியமர்த்தப்பட்ட 476 பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு 2013–2014–ஆம் ஆண்டு நிதியாண்டிற்கு ரூ.2.00 கோடி ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அரசு மருத்துவமனைகளில் பணிநியமனம் செய்யப்பட்டுள்ள 476 பல்நோக்கு மருத்துவப் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு 2014–2015–ஆம் நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

3. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலனை செய்து தற்போது அரசு மருத்துவமனைகளில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ள 476 பல்நோக்கு மருத்துவ பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கும் பொருட்டு 2014–2015–ஆம்

நிதியாண்டிற்கு ரூ.3.00 கோடி (ரூபாய் மூன்று கோடி மட்டும்) வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3-ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகை கீழ்க்கண்ட கணக்கு தலைப்புகளின் கீழ்பற்று வைக்கப்பட வேண்டும்.

2210- மருத்துவமும் பொது சுகாதாரமும் -01 நகர்பகுதி சுகாதார பணிகள் ஆங்கில முறை மருத்துவம் -110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I திட்டத்தில் சேராதது AB - வட்ட தலைமையிட மருத்துமனைகள் – 33 – தொழில்முறை, சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(த.தொ.கு.2210-01-110 AB -3343) (ரூ.240.00 லட்சம்)

2210 – மருத்துவமும் பொது சுகாதாரமும் – 01 நகர்பகுதி சுகாதரபணிகள் ஆங்கில முறை மருத்துவம் – 110 மருத்துவமனைகளும் மருந்தகங்களும் – I திட்டத்தில் சேராதது AC – வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் அல்லாத பிற மருத்துவமனைகள் – 33 தொழில் முறை சிறப்பு பணிகளுக்குத் தொகை கொடுத்தல் – 04 ஒப்பந்த ஊதியம்
(த.தொ.கு. 2210-01-110- AC – 3341) (ரூ.60.00 லட்சம்)

5. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.27586/சுகாதாரம்-II/2014, நாள்.16.06.2014 ஒப்புதலின் படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஜெ.ராதாகிருஷ்ணன்
அரசு செயலாளர்

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர், சென்னை-6.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர்கள்,
மாவட்ட கருவூல அலுவலர், மதுரை.
மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் வருவாய்), சென்னை-18.
மாநில கணக்காயர் (கணக்கு மற்றும் வருவாய்), சென்னை-18. (பெயரில்)
மாநில கணக்காயர் (தணிக்கை), சென்னை-18. (பெயரில்)

நகல்
நிதித் (சுகாதாரம்-II) துறை, சென்னை-9.
தரவு பிரிவு,
இ.கோ/உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்